**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை: திரு.J.ராஜேஷ்குமார், எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**

திருவள்ளுவராண்டு, 2054 குரோதி வருடம், புரட்டாசி திங்கள் 29–ம் நாள்

2024–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15–ஆம் நாள் –செவ்வாய்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 431/2015</u>**

(TNTS050005312015)

செங்கோட்டை தாலுகா, பிரானூர் பார்டர்,பிள்ளையார் கோவில் தெரு, கதவிலக்கம் 379 ல் குடியிருந்து வரும் மாடசாமி தேவர் அவர்கள் குமாரர், 47 வயதுள்ள கிருஷ்ணன்.

... வாதி

/எதிர்/

1. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து வரும் வீரபாண்டித்தேவர் அவர்கள் குமாரர், சுமார் 48 வயதுள்ள பேச்சிமுத்து.

2. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் கோட்டைச்சாமி அவர்கள் மனைவி, சுமார் 68 வயதுள்ள இசக்கிம்மாள்.

3. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து வரும் பேச்சிமுத்து அவர்கள் மனைவி, சுமார் 42 வயதுள்ள மாரியம்மாள்.

4. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் கோட்டைச்சாமி அவர்கள் குமாரர், சுமார் 49 வயதுள்ள தங்கச்சாமி.

5. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் கோட்டைச்சாமி அவர்கள் குமாரர், சுமார் 47 வயதுள்ள காசிப்பாண்டி.

6. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் கோட்டைச்சாமி அவர்கள் குமாரர், சுமார் 41 வயதுள்ள முருகன்.

7. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் கோட்டைச்சாமி அவர்கள் குமாரர், சுமார் 38 வயதுள்ள சின்னராஜ்.

8. கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து வரும் லெட்சுமணத்தேவர் அவர்கள் குமாரர், சுமார் 34 வயதுள்ள முத்துக்குமார் (இறப்பு)

9. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் முத்துக்குமரன் அவர்கள் மனைவி, சுமார் 42 வயதுள்ள சங்கரகோமதி.

10. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் முத்துக்குமரன் அவர்கள் குமாரர், சுமார் 23 வயதுள்ள அமர்நாத்.

11. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் முத்துக்குமரன் அவர்கள் குமாரத்தி, தரணி.

(மேற்படி 11ம் பிரதிவாதிக்கு தாயாரும், கார்டியனுமான 9ம் பிரதிவாதி மூலம்)

12. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, கடையநல்லூர், சுந்தரேசபுரம் ரைஸ்மில் மெயின் ரோடு கீழ் முக்கு என்ற முகவரியில் குடியிருந்து வரும் முத்துக்குமரன் அவர்கள் குமாரத்தி, சுமார் 18 வயதுள்ள ஹேமலதா.

... பிரதிவாதிகள்

(Amended as per order IA 8/24, Dated 16.07.2024)

இவ்வழக்கானது, பிராது தபசில் சொத்துக்கள் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டதென்று பிரதிவாதிகளுக்கெதிரில் விளம்புகை செய்யவும், பிராது தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அன்னாரின் வகையாட்களோ, வேலையாட்கேளா, யாதொரு இடையூறும் எக்காலத்திலும் செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக்கோரியும், இவ்வழக்கின் செலவு தொகை வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும் கேட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | : | 22.09.2015 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 22.09.2015 |
| வழக்கு மூலம் | : | 10.09.1921, 03.02.1933, 10.02.1937, 29.06.1996, 25.02.2009, 27.07.2010, 26.11.2010, 27.04.2011, 25.07.2011, 08.08.2011, 19.08.2015 மற்றும் 29.09.2013 ஆகிய தேதிகளில் போகநல்லூர் கிராமம் உட்பட்ட சுந்தரேசபுரம் ஊரில் வைத்து உற்பத்தி. |
| வழக்கின் மதிப்பு | : | "அ" பரிகாரத்திற்கு ரூ.10,000/-<br>அதில் பாதி மதிப்பு ரூ.5,000/- |
| முத்திரைக்கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டம், பிரிவு 25(b)-ன் கீழ் "அ" பரிகாரத்திற்கு ரூ.375.50/-ம், கூடுதலாக ரூ.0.50 பைசாவும் சேர்த்து மொத்தம் ரூ.376/- முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (15.10.2024) விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4, 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.M.தாஹிராபேகம் அவர்கள் முன்னிலையாகியும், 5,6, 9 முதல் 12 பிரதிவாதிகளை பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டும், 8ம் பிரதிவாதி காலம் சென்று விட்ட காரணத்தினாலும், உபயவாதிகள் விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், வாதியை அழைத்தும் ஆஜராகாததாலும், வாதியின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதியை கட்டளை X ன் கீழ் விசாரணைக்கு அழைத்தும் ஆஜராகாததாலும், வாதியின் வருகை தவறுகைக்காகவும் இவ்வழக்கு கட்டளை X விதி 4(2)ன் கீழ் தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.
2. செலவு தொகை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**<u>1ம் தபசில்</u>**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் சார்பதிவாளர் சரகம், சொக்கம்பட்டி ஜமீன், போகநல்லூர் கிராமம், சுந்தரேசபுரம், சர்வே எண்.322/7 கிழமேல் 35.75 அடி, தென்வடல் 74.25 அடி உள்ள காலிமனைக்கு எல்லை :

வடக்கில் – 1ம் பிரதிவாதியின் சொத்து

கிழக்கில் – கோவிந்தன் வகையறா சொத்து

தெற்கில் – 2ம் தபசில் சொத்து

மேற்கில் – கருப்பாயி வகையறா சொத்து

**<u>2ம் தபசில்</u>**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் சார்பதிவாளர் சரகம், சொக்கம்பட்டி ஜமீன், போகநல்லூர் கிராமம், சுந்தரேசபுரம், சர்வே எண்.322/7 கிழமேல் 35.75 அடி, தென்வடல் 85.75 அடி உள்ள காலிமனைக்கு எல்லை :

வடக்கில் – 1ம் தபசில் சொத்து

கிழக்கில் – கோவிந்தன் வகையறா சொத்து

தெற்கில் – மெயின் ரோடு

மேற்கில் – கருப்பாயி வகையறா

<u>3ம் தபசில் (1ம் பிராது சொத்து )</u>

ஷை போகநல்லூர் சுந்தரேசபுரம் ஊரில் மனை வீட்டுக்கு மால் சுப்பையாத்தேவர் மனைக்கு கிழக்கு, முத்தையாத்தேவர் மனைக்கு வடக்கு, வீ.சண்முகத்தேவர் மனைக்கு மேற்கு, கிழமேல் தெருவிற்கும் தெற்கு, இதற்குள் மனை கிழமேல் த.மு.9ரி, தென்வடல் த.மு.27 1/2 ம் அதிலிருந்து கூடாரவீடும் சர்வடியும் அவைகளில் கட்டிட சாமான்.

2024–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒம்/–J.ராஜேஷ்குமார்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**